
**நவம்பர் – 03**

# TNPSC துளிகள்

- ❖ உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி விமான விபத்தினைத் தவிர்க்கும் புலனாய்வாளர்கள் மற்றும் விமான வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 2025 ஆம் ஆண்டில் இந்தியா தனது முதல் தேசிய விமானப் பாதுகாப்பு மையத்தை நிறுவ உள்ளது.
- ❖ ஃபோர்டு மோட்டார் நிறுவனம் ஆனது, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அதன் சென்னை ஆலையில் உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்காக வேண்டி 3,250 கோடி ரூபாயை முதலீடு செய்ய உள்ளது என்பதோடு இது உலகளாவியச் சந்தைகளுக்கு அடுத்த தலைமுறை நுட்பத்திலான பவர்டிரெய்ன்/ திறன் பொறித் தொடர் வசதியை அமைக்கும்.
- ❖ சென்னையைச் சேர்ந்த இளம்பர்தி A.R. போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவில் நடைபெற்ற பிஜெல்ஜினா ஓபனில் இந்தியாவின் 90வது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆனார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு முழுவதும் பதிவான மழைப்பொழிவு 2025





- ❖ அக்டோபர் மாதத்தில், தமிழகத்தில் 17.1 செ.மீ என்ற இயல்பு அளவை விட அதிகமாக 23.3 செ.மீ மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.
- ❖ சென்னையின் நுங்கம்பாக்கம் வானிலை ஆய்வு மையம் ஆனது, இந்த தசாப்தத்தின் இரண்டாவது அதிகபட்சமான அக்டோபர் மாத மழைப்பொழிவான 32.4 செ.மீ மழைப் பொழிவைப் பதிவு செய்துள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், மாநிலத்தில் சராசரியை விட 25% அதிகமாக 21.4 செ.மீ மழைப்பொழிவுப் பதிவானது.
- ❖ வடகிழக்குப் பருவமழை பொழிவானது அக்டோபர் மாதத்தின் பெரும்பான்மையான நாட்களில், கிட்டத்தட்ட தினசரி மழைப்பொழிவை ஏற்படுத்தி தீவிரமாக இருந்தது.
- ❖ அக்டோபர் மாதத்தின் போது, தமிழகம் அதற்கான வடகிழக்குப் பருவமழைப் பொழிவு பதிவில் சற்றேறக்குறைய பாதியளவிலான மழைப் பொழிவினைப் பெற்றுள்ளது.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் மற்றும் திட்டங்கள்

- ❖ 2021 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டின் காற்றாலை மின் உற்பத்தித் துறை 5,700 கோடி

ரூபாய்க்கு மேல் பெற்றுள்ளது மற்றும் 816 மெகாவாட் அளவிலான கூடுதல் திறனை உற்பத்தி செய்துள்ளது.


- 600 மெகாவாட் அளவிலான புதிய காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களுக்கு கூடுதலாக 4,200 கோடி ரூபாய் திட்டமிடப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் சூரிய ஆற்றல் உற்பத்தித் துறை 6,736 மெகாவாட் திட்டங்களுக்காக 23,500 கோடி ரூபாய்க்கு மேல் பெற்றுள்ளது.
- 39,000 கோடி ரூபாய் (5,700 மெகாவாட்) மதிப்புள்ள சூரிய சக்தி திட்டங்கள் மேல் நிலை ஒப்புதல் நிலைகளில் உள்ளன.




- 25,500 மெகாவாட்களுக்கு மேல் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனுடன் தமிழ்நாடு தேசிய அளவில் நான்காவது இடத்தில் உள்ளது.
- 11,500 மெகாவாட் அளவிலான நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறன் தமிழ்நாட்டினை இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இடம் பெறச் செய்தது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து 50 சதவீத மின்சாரத்தை உற்பத்தி செய்ய மாநிலம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தேசிய உறுதிப்பாடுகளுக்கு இணங்க, 2070 ஆம் ஆண்டிற்குள் கார்பன் உமிழ்வினை 70 சதவீதம் குறைத்து நிகர சுழி நிலையை அடைய தமிழ்நாடு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2034–35 ஆம் ஆண்டிற்குள் திட்டமிடப்பட்ட மின் தேவையானது 20,700 மெகாவாட்டில் இருந்து 35,500 மெகாவாட்டாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- குந்தாவில் 500 மெகாவாட் நீரேற்று புனல் மின்னாற்றல் சேமிப்பு நிலையம் அமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- வெள்ளிமலையில் 1,100 மெகாவாட் மற்றும் ஆழியாரில் 2,400 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திக்கு முன் செயலாக்க நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.
- தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகள் சிறப்பான காற்று வேகம் மற்றும் அதிக திறன் உருவாக்க காரணிகளுடன் 35 ஜிகாவாட் அளவிலான கடல் காற்று ஆற்றலைக் கொண்டுள்ளது.
- தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம் மற்றும் இந்தியா-டென்மார்க் பசுமை உத்திசார் கூட்டாண்மை ஆகியவை தமிழ்நாட்டின் கடற்கரையில் இந்தியாவின் முதல் கடல் காற்று திட்டத்தினை அமைக்கத் தயாராகி வருகின்றன.

## பருவநிலை நடவடிக்கை கண்காணிப்பு

- தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கான பருவநிலை நடவடிக்கை கண்காணிப்பு மற்றும் பருவநிலை கார்பன் நீக்க நடவடிக்கை செயல்பாடுகளைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இராமநாதபுரம், விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்கள் வசுதா அறக்கட்டளையின் ஆதரவுடன் பகுப்பாய்வு செய்யப் பட்டுள்ளன.
- மாவட்ட அளவிலான செயல் திட்டங்கள் மூலம் நிகர சுழிய அளவிலான உமிழ்வை அடைவதை நோக்கி மாநிலத்தை வழி நடத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கம் ஆகும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு சற்றேறக்குறைய 10 ஜிகாவாட் (GW) புதுப்பிக்கத் தக்க ஆற்றலை புதிதாக உற்பத்தி செய்துள்ளது.
- மாநிலத்தின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் சுமார் 60 சதவீதம் தற்போது புதுப்பிக்கத் தக்க மூலங்களிலிருந்து பெறப்படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் கோயம்புத்தூரில் 500 நகர பேருந்துகளை மின்மயமாக்குவதும், ஐந்து லட்சம் தெரு விளக்குகளுக்கு மாற்றாக ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகளைப் பொருத்துவதும் இந்தத் திட்டங்களில் அடங்கும்.




# தேசியச் செய்திகள்

## வனவாசிகள் இடமாற்றக் கொள்கை

- பழங்குடியினர் விவகார அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் இடமாற்றங்களுக்கான தரநிலைகள், காலக்கெடு மற்றும் பொறுப்புணர்வை அமைக்க ஒரு தேசிய கட்டமைப்பைச் செயல்படுத்த உள்ளது.
- புலிகள் வளங்காப்பகங்களிலிருந்து வனவாசி சமூகங்களை இடமாற்றம் செய்வது தன்னார்வ அடிப்படையிலானதாகவும், விதிவிலக்கு அடிப்படையிலானதாகவும், ஆதாரங்களின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

- ஒரு தேசிய தரவு தளம் அனைத்து இடமாற்றங்கள், இழப்பீடு மற்றும் இடமாற்றத்திற்குப் பிந்தைய நிலையைப் பதிவு செய்து கண்காணிக்கும்.
- வருடாந்திர சுயாதீனத் தணிக்கைகள் இந்த நடவடிக்கைகள் வன உரிமைகள் சட்டம், 2006 மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 ஆகியவற்றுடன் இணங்கப் படுவதைச் சரிபார்க்கும்.
- கிராமங்கள் தங்கள் தனிப்பட்ட வன உரிமைகள் அல்லது சமூக வன உரிமைகளைப் பயன்படுத்துவதோடு, காடுகளில் தொடர்ந்து வசிக்கலாம்.
- இடமாற்றத்திற்கான ஒப்புதல் சுதந்திரமானதாகவும், தகவலறிந்ததாகவும், வட்டார மொழியில் வழங்கப்பட்டதாகவும், சுயாதீன உரிமையியல் சமூக அமைப்புகளால் சரி பார்க்கப் பட்டதாகவும் இருக்க வேண்டும்.




## சர்வதேச சூரிய சக்தி கூட்டணி சபை 2025




- சர்வதேச சூரிய சக்தி கூட்டணி (ISA) சபையின் எட்டாவது அமர்வு புது டெல்லியில் நடைபெற்றது.
- மொத்த நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் இந்தியா உலகளவில்

நான்காவது இடத்திலும், சூரிய சக்தி உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், காற்றாலை மின்சார உற்பத்தில் நான்காவது இடத்திலும் உள்ளது.

- இந்தியாவின் நிறுவப்பட்ட சூரிய சக்தி திறன் 120 ஜிகாவாட்களை கடந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் அளவிலான புதைபடிவ எரிபொருள் சாரா மின் உற்பத்தித் திறனை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ISA முன்னெடுப்புகளில் உலகளாவிய சூரிய சக்தி மையம், வளர்ந்து வரும் சிறிய தீவு நாடுகளுக்கான தளம் மற்றும் ஆப்பிரிக்காவின் சூரிய சக்தி சிறு மின் கட்டமைப்புத் திட்டம் ஆகியவை அடங்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## NAM அமைச்சர்கள் கூட்டம் 2025





- உகாண்டாவின் கம்பாலாவில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் (NAM) 19வது இடைக்கால அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது.
- உகாண்டா 2024-26 ஆம் ஆண்டிற்கான NAM தலைமை பொறுப்பினைக் கொண்டுள்ள இந்தியா, வளர்ந்து வரும் நாடுகளிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவது குறித்த விவாதங்களை நோக்கி உறுப்பினர் நாடுகளை வழிநடத்தியது.
- வளர்ந்து வரும் நாடுகளிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதையும் பகிரப்பட்ட உலகளாவிய வளங்களுக்கான ஒத்துழைப்பை ஊக்குவிப்பதையும் இந்தக் கூட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Deepening Cooperation for Shared Global Affluence" என்பதாகும்.
- இந்த அமைச்சர்கள் கூட்டத்தின் போது, வளர்ந்து வரும் நாடுகளுடன் அரசுமுறை மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக NAM உறுப்பினர் நாடுகளுடன் இந்தியா இணைந்து செயல்பட்டது.
- NAM கூட்டணியின் ஸ்தாபன உறுப்பினரான இந்தியா, இந்த இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் விழுமியங்களுக்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப் படுத்தியது.

# பொருளாதாரச் செய்திகள்

## தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி - செப்டம்பர் 2025

- தொழில்துறை உற்பத்திக் குறியீடு (IIP) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 4% ஆக வளர்ச்சியடைந்து, கடந்த மூன்று மாதங்களில் இல்லாத அளவுக்கு குறைந்து உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்துறை வளர்ச்சி 3% ஆக இருந்தது, இது கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகக் குறைவானதாகும்.
- சுரங்கத் துறை வளர்ச்சி ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்த 6.6 சதவீதத்தில் இருந்து குறைந்து செப்டம்பர் மாதத்தில் 0.45% குறைந்தது.
- நுகர்வோரின் நீடித்த பயன்பாடு சாரா பொருட்கள் துறை 2.9% சரிந்த அதே நேரத்தில் நுகர்வோரின் நீடித்தப் பயன்பாடு சார் பொருட்கள் துறை 10.2% வளர்ச்சி அடைந்தது.
- உற்பத்தி துறை 4.8% வளர்ச்சியடைந்தது, மேலும் முதன்மைப் பொருட்கள் துறை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 1.4% ஆகக் குறைந்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## செங்குத்தாக தரையிறங்கும் தொழில்நுட்பம்

- மதராஸின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் செங்குத்தாகப் புறப்படும் விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (UAVs) ஆகியவற்றிற்கான மித வேகத்திலான தரையிறங்கும் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்புமுனையை எட்டியுள்ளனர்.
- தேவையான தரையிறங்கும் வேகத்தை அடைய அவர்கள் நிகழ்நேரக் கலப்பு நுட்ப ஏவுகல த்ரஸ்டர்/உந்துவிசை இயந்திரத்தினை மெய்நிகர் மாதிரியாக்க / உருவகப் படுத்துதலுடன் ஒருங்கிணைத்தனர்.
- சோதனையின் போது வினாடிக்கு 0.66 மீட்டர் (மீ/வி) என்ற தரை இறங்கு/தொடும் வேகம் எட்டப்பட்டது.
- செங்குத்தாக தரையிறங்கும் தளங்களுக்கு திரவ இயந்திரங்களை விட கலப்பு வகை ஏவுகல மோட்டார்கள்/விசைப்பொறிகள் பாதுகாப்பானவை மற்றும் குறைவான சிக்கல் உடையவை என்று கண்டறியப்பட்டது.
- இந்தக் குழுவினர், பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக அழுத்தப்

பட்ட காற்றை ஆக்ஸிஜனேற்றியாகப் பயன்படுத்தி ஒரு கலப்பு வகை ஏவுகல எரி பொருளை உருவாக்கினர்.




## காலிபர் மையம்




- டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பகுதியான தேசிய உயிரியல் அறிவியல் மையம் மற்றும் சர்வதேச தத்துவார்த்த அறிவியல் மையம் ஆகியவற்றால் காலிபர்/ CALIBRE மையம் நிறுவப்பட உள்ளது.
- CALIBRE என்பது உயிரியல் ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான செயற்கை கற்றல் மற்றும் நுண்ணறிவு மையம் (Centre for Artificial Learning and Intelligence for Biological Research and Education) என்பதைக் குறிக்கிறது.
- உயிரியல் ஆராய்ச்சி, கல்வி மற்றும் புதுமைகளில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைப்பதை இந்த மையம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அடிப்படை, பயன்பாட்டு மற்றும் மாறுநிலை உயிரியல் ஆராய்ச்சிக்கான மேம்பட்ட

செயற்கை நுண்ணறிவு கருவிகளை உருவாக்குவதற்கான உள்கட்டமைப்பை இது வழங்கும்.

- CALIBRE ஆனது உயிரியல் ஆய்வுகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்த இளம் இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சியை வழங்கும்.
- செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்த இந்த மையம் நரம்பியல் மண்டல அமைப்பினை ஒத்த, மூளையின் செயல்பாடுகளைக் கொண்டு வடிவமைக்கப் பட்ட கணினி அணுகுமுறைகளைப் பயன்படுத்தும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய மண் பாதுகாப்புச் சட்ட கட்டமைப்பு





- IUCN அமைப்பானது மண் பாதுகாப்புச் சட்டம் குறித்த தீர்மானம் 007 என்பதை ஏற்று, மண் பாதுகாப்புக்கான உலகின் முதல் மாதிரிச் சட்டக் கட்டமைப்பை உருவாக்கி வருகிறது.
- மண் வளங்காப்பு, மீளுருவாக்க வேளாண்மை மற்றும் மண் வளத்திற்கான சட்டப் பூர்வப் பொறுப்புக் கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் தேசியச் சட்டங்களை உருவாக்குவதில் 90 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தத் தீர்மானம் வழிகாட்டும்.
- சர்வதேச மண் வளங்காப்பு அமைப்புகள் மற்றும் சிந்தனைக் குழுக்கள் இந்தத் தீர்மானத்தை இணைந்து ஆதரித்தன.
- உணவு, நீர், பல்லுயிர் பெருக்கம் மற்றும் பருவநிலை மீள்தன்மைக்கு மண் வளங்காப்பு அவசியம் என்பதை ஓர் உலகளாவிய வளங்காப்பு அமைப்பு முதன்முறையாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிப்பதை இது குறிக்கிறது.
- இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, மண் வளங்காப்பு குறித்த சர்வதேச உடன்படிக்கை அல்லது உலகளாவியச் சட்டக் கருவிக்கான கருத்தாக்கங்களை உருவாக்க IUCN அமைப்பானது ஒரு பணிக்குழுவை உருவாக்க உள்ளது.

- முன்மொழியப்பட்ட மாதிரி மண் பாதுகாப்புச் சட்டம், வேளாண்மை, பருவநிலைக் கொள்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புத் திட்டங்களில் மண் பாதுகாப்பை ஒருங்கிணைக்க உலக நாடுகளுக்கு உதவும்.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், விழிப்புணர்வு மற்றும் விரிவான மண் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்க பல நாடுகளுடன் ஆலோசனைகள் நடத்தப் பட்டுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## உணவு அமைப்புகள் குறித்த CSE அறிக்கைகள் 2025




- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) சமீபத்தில் "sustainable food systems" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் சுமார் 11 சதவீதம் ஆனது வேளாண்மை, கால்நடைகள் மற்றும் பூச்சிக்கொல்லிப் பயன்பாட்டிலிருந்து வெளியானது.
- இந்தியாவில் மழைக் காலத்தினைச் சார்ந்து பயிரிடப்படும் நெல் சாகுபடியின் மகசூல் 2050 ஆம் ஆண்டில் 20 சதவீதமும், தகவமைப்பு நடவடிக்கைகள் எதுவும் இல்லாமல் 2080 ஆம் ஆண்டில் 47 சதவீதமும் குறையக்கூடும்.
- அதே காரணிகளின் கீழ் பாசன வசதி கொண்ட நெல் சாகுபடியின் மகசூல் 2050 ஆம் ஆண்டில் 3.5 சதவீதமும், 2080 ஆம் ஆண்டில் 5 சதவீதமும் குறையக்கூடும்.
- இந்தியாவின் 573 கிராமப்புற மாவட்டங்களில் சுமார் 90 சதவீதம் பூச்சி தாக்குதல்கள், நோய்கள் மற்றும் நீர் பற்றாக்குறையை ஏற்படுத்தும் சீரற்ற பருவமழைப் பொழிவுகள் உள்ளிட்ட பருவநிலை அபாயங்களை எதிர்கொள்கின்றன.
- CSE அறிக்கை குறைவான உள்ளீட்டுத் தேவை உள்ள வேளாண்மை, பல வகை பயிர் சாகுபடிக்கான விருப்பத் தேர்வுகள் கொண்ட பயிர்ச் சாகுபடி, ஊட்டச்சத்து நிறைந்த மற்றும் பருவநிலை தகவமைவு கொண்ட பயிர்கள் மற்றும் நுகர்வோர் விருப்பத் தேர்வுகளுக்கு ஏற்ப உணவு உற்பத்தியைச் சீரமைத்தல் ஆகியவற்றைப் பரிந்துரை செய்கிறது.
- "Missing from the Plate: Edible Plants in Wetlands Lose Favour" என்ற இரண்டாவது அறிக்கையும் வெளியிடப்பட்டது.
- இது உண்ணக் கூடிய ஈரநிலத் தாவரங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மீள்தன்மைக்கு அவற்றின் வெகு சாத்தியமானப் பங்களிப்பை ஆவணப் படுத்துகிறது.

## NDC அறிக்கை 2025

- UNFCCC (பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு உடன்படிக்கை) அமைப்பினால் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்கான NDC (தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்டப் பங்களிப்புகள்) தொகுப்பு அறிக்கையானது, பெலெமில் நடைபெற உள்ள COP30 மாநாட்டிற்கு முன்னதாகவே பருவநிலை சார் நடவடிக்கைகளை மதிப்பிடுகிறது.
- கூட்டு உலகளாவிய உமிழ்வுகள் குறைந்து வந்தாலும், வெப்பமயமாதலை 1.5°C வரம்பிற்குள் கட்டுப்படுத்துவதற்கான பாரிசு உடன்படிக்கையின் இலக்கை அடைவதற்கான வேகம் போதுமானதாக இல்லை.
- உலகளாவிய உமிழ்வுகளில் சுமார் 30% பங்கினைக் கொண்ட 64 நாடுகளின் புதிய NDCகள், 2035 ஆம் ஆண்டிற்குள் 2019 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 17% வரை உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- 10 நாடுகளுள் 9 நாடுகள் தற்போது பொருளாதார அளவிலான உமிழ்வு இலக்குகளைக் கொண்டுள்ளன என்பதோடு மேலும் 97% நாடுகள் பருவநிலைச் செயல்படுத்தலை ஆதரிக்கும் தேசிய சட்டம் அல்லது கொள்கை கட்டமைப்புகளைக் கொண்டுள்ளன.
- தகவமைப்பு நடவடிக்கைகள் 73% NDCகளில் சேர்க்கப்பட்டுள்ளன அதே நேரத்தில் 94% NDCகள் பருவநிலைத் தாக்கங்களிலிருந்து ஏற்படும் இழப்பு மற்றும் சேதத்தை நிவர்த்தி செய்வதற்கான குறிப்பு நடவடிக்கைகளாகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பை 2025

- இந்திய அணி தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி தனது முதல் ஐசிசி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றது.
- 36 வயதான ஹர்மன்ப்ரீத் கவுர் மகளிர் உலகக் கோப்பையை வென்ற மிக வயதான

கேப்டன் ஆவார்.

- ❖ உலகக் கோப்பை ஆண்கள் / பெண்கள் நாக் அவுட் ஆட்டத்தில் அரைசதம் அடித்து ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை தீப்தி சர்மா பெற்றார்.
- ❖ 1978 முதல் ஆஸ்திரேலியா 7 முறை மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ளது, அதைத் தொடர்ந்து இங்கிலாந்து 4 முறை வென்றுள்ளது.




## தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025

- ❖ 4வது தெற்காசிய தடகளக் கூட்டமைப்பு சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியானது (2025) ஜார்க்கண்டின் ராஞ்சியில் உள்ள மொராபாதி கால்பந்து மைதானத்தில் நடைபெற்றது.
- ❖ இந்தியா 20 தங்கம், 20 வெள்ளி மற்றும் 18 வெண்கலம் உட்பட 58 பதக்கங்களுடன் ஒட்டு மொத்த பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- ❖ இலங்கை 16 தங்கம், 14 வெள்ளி மற்றும் 10 வெண்கலம் உட்பட 40 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

| SR | COUNTRY | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1. | INDIA | 20 | 20 | 18 | 58 |
| 2. | SRI LANKA | 16 | 14 | 10 | 40 |
| 3. | NEPAL | 0 | 2 | 4 | 6 |
| 4. | BANGLADESH | 0 | 0 | 3 | 3 |
| 5. | MALDIVES | 0 | 0 | 1 | 1 |

# இதரச் செய்திகள்

## ஸ்வஸ்த் நாரி பிரச்சாரத்தின் கின்னஸ் சாதனைகள்

- சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் "ஸ்வஸ்த் நாரி, சஷக்த் பரிவார் அபியான்" திட்டத்தின் மூலம் இந்தியா மூன்று கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தது.
- 3.21 கோடிக்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளதுடன், ஒரு மாதத்தில் ஒரு சுகாதாரத் தளத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பதிவு செய்தற்கான சாதனையும் இதில் அடங்கும்.
- இரண்டாவது சாதனையானது, 9.94 லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்பாளர்களுடன், ஒரே வாரத்தில் மார்பகப் புற்றுநோய் பரிசோதனைக்கு இணைய வழியில் அதிக மக்கள் பதிவு செய்த சாதனையாகும்.
- மூன்றாவது சாதனையானது, 1.25 லட்சம் பங்கேற்பாளர்களைக் கடந்து, ஒரு வாரத்திற்குள் மாநில அளவில் முக்கிய அறிகுறிகளுக்கான பரிசோதனைக்கு இணைய வழியில் அதிக மக்கள் பதிவு செய்த சாதனையாகும்.
- பெண்கள், இளம் பருவப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக செப்டம்பர் மாதம் 17 முதல் அக்டோபர் மாதம் 02 ஆம் தேதி வரை இந்த பிரச்சாரம் நடைபெற்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★